Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

தமிழ்நாடு அரசு நகர்ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)-தருமபுரி மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை.திரு.இரா. வாழவந்தான்,பி.இ.,

ந.க.எண்.1616/2017/தம. நாள்.28.11.2017.

பொருள். வரண்முறை - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - தருமபுரி மண்டலம் / மாவட்டம் - நல்லம்பள்ளி வட்டம் தடங்கம் ஊராட்சி / கிராமம்-ச.எண்.579/1D ஆகியவற்றில் 0.67.00 ஹெக்டர் (1.65 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் - அனுமதியற்ற மனைப்பிரிவு - கொள்கை ஒப்புதல் வழங்குதல்- தொடர்பாக.

பார்வை.
1. அரசாணை (நிலை) எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின்(வழிகாட்டி நெறிமுறைகள்) ந.க.எண்.13193/2017/எல்ஏ2 நாள்.30.10.2017 மற்றும் 31.10.2017.
4. மனுதாரர் திரு.S. மாதேஸ்வரன் த/பெ.செல்லப்பன் அவர்களின் Online விண்ணப்பம் எண். DTCP/210025214/2017 நாள்.07.11.2017

உத்தரவு:-

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளில் உத்தரவிடப்பட்டதற்கிணங்க பார்வை 4-ல் சுட்டிய மனுதாரரின் online விண்ணப்பத்துடன் பெறப்பட்ட தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம, தடங்கம் ஊராட்சி / கிராமம், ச.எண்.579/1D -ல் பரப்பு 0.67.00 ஹெக்டர் (1.65 ஏக்கர்) மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரண்முறைப்படுத்த ஏதுவாக பிரஸ்தாப மனையிடத்திற்கு "A to F" என எல்லையிட்டு ம.வ.(வ.மு)/ ந.ஊ.து.இ(தம)எண்.07/2017 என எண்ணிட்டு இணைப்பில் காணும் நிபந்தனைகளுடன் கொள்கை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்.

வரண்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றை உள்ளாட்சி (தடங்கம் ஊராட்சி)-யால் தானமாக பெற்றுக் கொள்ளவும் அவற்றை தனியாக வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்தும்/தனிபட்டா பெற்றும் உள்ளாட்சியால் சொத்துப் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட பிறகு, தனிமனைகளுக்கான வரண்முறை செய்யப்பட வேண்டும்.

மேற்படி பிரஸ்தாப கொள்கை ஒப்புதல் மனைப்பிரிவு விவரங்கள் கீழ்கண்டவாறு.

1. மனை இடத்தின் மொத்தபரப்பளவு	- 0.67.00 ஹெக்டர் (அ) 1.65 ஏக்கர்
2. அமைந்துள்ள மனைகளின் எண்ணிக்கை	- 41
3. பொது ஒதுக்கீடு (OSR - Park) .	- 215280.53 ச.மீ

கட்டணம்:-

1. கூராய்வு கட்டணம் - Transaction No.JJUR25793299176 Online-ல் விற்கப்படாத 21 மனைகளுக்கும் ரூ.10,500/- செலுத்தப்பட்டுள்ளது. வரைபடத்தில் Aatch செய்து காட்டப்பட்டுள்ள மனைகளுக்கு கூராய்வு கட்டணம் செலுத்தப்படவில்லை. இம்மனைகளுக்கு வரண்முறை கோரி விண்ணப்பிக்கும் போது கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பில் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

Head of Account

0217 – Urban Development – 03 1DSMT 800 Other Receipts – AA- Director of Town Planning – I Collection of Payments for Service Rendered 0217 -03-800-AA-0102

2. வரன்முறை கட்டணம் - 1ச.மீ.க்கு ரூ.25/. வீதம் கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பில்செலுத்தப்பட வேண்டும்.

HOD Code 26-02

0217	**- Urban Development**
60	**- Other Urban Development Schemes**
800	**- Other Receipts**
AT	**- Receipts under Regularization Charges of Unapproved Layouts and Plots –DTCP (DPC-0217 – 60- 800 – AT- 0007)**

3. அபிவிருத்தி கட்டணம் - 1ச.மீ.க்கு ரூ.30/-

மேற்படி இத்திட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வளர்ச்சிக் கட்டணம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தனி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்ட உத்தரவு மற்றும் வரைபடங்களை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
தருமபுரி மண்டலம், தருமபுரி.

இணைப்பு

1. கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்- 3 நகல்கள்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

(மேற்படி வரைபடம் மற்றும் நிபந்தனைகளை சார்பதிவாளர் மற்றும் மனுதாரருக்கு மேலொப்பமிட்டு நகல் வழங்கப்பட வேண்டும்).

பெறுநர்

தலைவர் / தனி அலுவலர்,
தடங்கம் ஊராட்சி,
நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் / வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

நகல்

1. The Sub Registrar
   Sub Registrar Office,
   Dharmapuri (West),
   Dharmapuri District
2. Thiru. S. Madeswaran,
   S/o. Sellappan,
   3/414, A-79 IInd Cross,
   Nandhinagar, Pidamaneri
   Dharmapuri District.

இம்மனைப்பிரிவல் அமையும் தனித்த மனைகள் உள்ளாட்சியால் முறைப்படுத்தப்பட்ட பின்னர் பத்திர பதிவு செய்யப்பட வேண்டும்.

நகர் ஊரமைப்பு துறை
தருமபுரி மண்டலம்

தருமபுரி மாவட்டம்,
நல்லம்பள்ளி வட்டம்,
தடங்கம் ஊராட்சி

ம.வ.(வரண்முறை) /ந.ஊ.து.இ. (தம) எண்:07/2017

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) (i) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ.(வரண்முறை)/ந.ஊ.து.இ.(தம) எண்.07/2017 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சிகள் சட்டம் 1997 விதி 3(1)-ன் படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 175 மற்றும் 179-ம் பிரிவுகளின்படி 300(8) பிரிவின் கீழ்ஏற்படுத்தப்பட்ட உபவிதிகளின்படியும்/அரசு ஆணை எண். 71 ஊரக வளர்ச்சி துறை நாள் 16.06.2003-ல் தெரிவித்துள்ளபடியும், சரளைக்கற்களைக் கொண்டு நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். இதனை உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.

(ii) மேலும் தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புறவு வசதி, தெரு விளக்கு, குடிநீர் ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.

(iii) நகர் ஊரமைப்பு துறை, தருமபுரி கொள்கை ஒப்புதல் வழங்கபபட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள், ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

(iv) அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை அரசு ஆணை எண். 71, ஊரக வளர்ச்சி துறை, நாள். 16.06.2003-ன் படி மனைப்பிரிவு விண்ணப்பதாரா / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க தடங்கம் ஊராட்சி, தலைவர் /தனிஅலுவலர் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும்.

(v) மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக நில அளவை செய்து வரையறை செய்வதற்கான உட்பிரிவு , செய்து உள்ளாட்சிக்கான சாலை பதிவேட்டில் (Road Register) சேர்க்கப்பட வேண்டும்.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும 7 மீட்டர் (23 அடி) மற்றும் 9 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்), 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்). 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்கு மேலும் 21 மீட்டர் (70 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8மீ(6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின் படி 2.4 மீ. (8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

4) மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ. அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும்.

5) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர்/ 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7) கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துலோ கூடாது.

8) 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

.3.

9) மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மனை உரிமையாளர்கள் 6 மாத காலத்திற்குள் தனித்தனியாக விண்ணப்பித்து தடங்கம் ஊராட்சி , தலைவர் / தனி அலுவலரிடம் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். பின்னர் அம்மனையில் கட்டிடம் கட்டுவதற்கு தடங்கம் ஊராட்சியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10) பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து மனைப்பிரிவு உரிமையாளர் திரு. மாதேஸ்வரன் அவர்கள் தடங்கம் ஊராட்சிக்கு தானமாக பத்திரபதிவு செய்து ஒப்படைக்க வேண்டும்.

11) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Executive Authority)-யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு செய்யப்பட வேண்டும். மேலும் மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

12) (அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையை சார்ந்த இவ்வலுவலகத்தால் கொள்கை ஒப்புதல் (Principle Clarence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(இ) மனைப்பிரிவு இடம் 1894 ஆம் ஆண்டு கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்ச வரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதாக தலைவர் / தனி அலுவலர், தடங்கம் ஊராட்சிக்கு அவர்கள் மன நிறைவு அடைந்த பின்னர் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஈ) மேற்படி மனைப்பிரிவில் அமையும் மனைகள் வரண்முறை படுத்தும் போது அதன் ஆணை நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(உ) மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையு மனைநிறைவு அடைந்த பின்னர் மனைப்பிரிவிற்கு தலைவர் / தனி அலுவலர் ஊராட்சி அவர்கள் அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

13) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
தருமபுரி மண்டலம், தருமபுரி.

24/11/17

பெறுநர்

தலைவர் / தனி அலுவலர்,
தடங்கம் ஊராட்சி,
நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் / வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

இணைப்பு

1. கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்- 3 நகல்கள்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

(மேற்படி வரைபடம் மற்றும் நிபந்தனைகளை சார்பதிவாளர் மற்றும் மனுதாரருக்கு மேலொப்பமிட்டு நகல் வழங்கப்பட வேண்டும்).

நகல்

1. The Sub Registrar
   Sub Registrar Office,
   Dharmapuri (West),
   Dharmapuri District

(இம்மனைப்பிரிவல் அமையும் தனித்த மனைகள் உள்ளாட்சியால் முறைப்படுத்தப்பட்ட பின்னர் பத்திர பதிவு செய்யப்பட வேண்டும்.)

2) Thiru. S. Madeswaran,
   S/o. Sellappan,
   3/414, A-79 IInd Cross,
   Nandhinagar, Pidamaneri
   Dharmapuri District.

தடங்கம் ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை: திருமதி.க.ஜெயந்தி, பி.காம்.,

அலுவலக கடித எண்: 01/2017-18/த.ப. நாள்: 02.01.2018

பொருள்: வரன்முறைபடுத்துதல் - நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் - தடங்கம் ஊராட்சி - பெருமாள் கோவில் மேடு கிராமம் - தடங்கம் கிராம சர்வே எண்: 579/1-D-ல் 0.67.0 ஹெக்டேர் பரப்பில் அமைக்கப்பட்ட நந்திநகர் என்னும் அனுமதியற்ற மனைப்பிரிவினை முறைப்படுத்துதல் - ஊராட்சியில் மனை வரைபட ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), தருமபுரி மண்டலம் அவர்களின் ந.க.எண்: 1616/2017/த.ம. நாள்: 28.11.2017.
2. இவ்வூராட்சி தீர்மான எண்: 2/29.12.2017.

❋❋❋

உத்தரவு

நல்லம்பள்ளி ஒன்றியம், தடங்கம் ஊராட்சிக்குட்பட்ட பெருமாள் கோவில் கோவில் மேடு கிராம பகுதியில் தடங்கம் கிராம சர்வே எண்: 579/1-D-ல் 0.67.0 ஹெக்டேர் (1.65 ஏக்கர்) பரப்பில் ஏற்கனவே அமைக்கப்பட்ட 41 மனைகள் கொண்ட நந்தி நகர் என்னும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு தமிழக அரசின் வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் பார்வை (1)ல் கண்ட கடிதத்தின் வாயிலாக கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, மேற்படி இம்மனைபிரிவில் விற்பனையாகாத கீழ்க்கண்ட 20 மனைகளை முறைப்படுத்த பார்வை (2)ல் கண்ட இவ்வூராட்சி தீர்மானம் மூலமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முறைப்படுத்தப்படும் விற்பனையாகாத காலி மனைகள் விவரம்.

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 11, 20, 21, 22, 23, 24, 25, 27, 28, 29, 30, 31.

இக்காலி மனைகளுக்கு முறைப்படுத்துதல் கட்டணமாக ரூ.75607/- (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரத்து அறுநூற்று ஏழு மட்டும்) ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி சர்வே எண்: 579/1-D-ல் அமைக்கப்பட்ட நந்தி நகர் எனும் முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் மேற்கண்ட விற்பனையாகாத 20 காலி மனைகளை முறைப்படுத்தி இம்மனைகளுக்கு ஊராட்சி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தி. [signature] 2-1-18

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
தடங்கம் ஊராட்சி.

[signature] 2-1-2018

பெறுதல்:

எஸ்.மாதேஸ்வரன்,
த/பெ. செல்லப்பன்,
3/414, ஏ-79, இரண்டாவது குறுக்கு தெரு,
நந்தி நகர், பிடமனேரி,
தருமபுரி.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate